செ.வெ.எண்: 270 நாள்: 13.06.2021

செய்திக் குறிப்பு நாள்.13.06.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு.மு.க.ஸ்டாலின் அவர்களது உத்தரவின்படி

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் முன்னிலையில் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு **சொந்தமான சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 32 கிரவுண்ட் நிலம் 13.06.2021 அன்று சுவாதீனம் பெறப்பட்டது**

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சென்னை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் 141 கிரவுண்ட் நிலம் சொந்தமாக உள்ளது. இவற்றில் கதவு எண்.768–ல் 44.5 கிரவுண்ட் பரப்பில் சீதா கிங்ஸ்டன் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி இயங்கி வந்தது இவற்றில் 2010–ம் ஆண்டு 12.5 கிரவுண்ட் இடம் திருக்கோயில் வசம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது. 99 ஆண்டு குத்தகை காலம் முடிவுற்ற பின் இணை ஆணையர் நீதிமன்றத்தில் சட்டப்பிரிவு 78–ன் கீழ் சுவாதீன உத்தரவு பெறப்பட்டு பின்னர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் கலவலக் கண்ணன் செட்டி சாரிட்டீஸ் மூலம் வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கில் திருக்கோயிலுக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டது. அதன் அடிப்படையில் இப்பள்ளிக்கூடத்தை தங்களால் தொடர்ந்து நடத்த இயலாது என கலவலக் கண்ணன் செட்டி சாரிட்டீஸ் நிறுவனத்தினர் தெரிவித்து இன்று(13.06.2021) காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் செயல் அலுவலரிடம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் முன்னிலையில் கலவலக் கண்ணன் செட்டி சாரிட்டீஸ் நிர்வாக அறங்காவலரால் 32 கிரவுண்ட் இடம் மற்றும் பள்ளி கட்டடங்களுடன் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு திருக்கோயில் வசம் முழுமையாக சுவாதீனம் பெறப்பட்டது. இந்நிகழ்வில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை செயலாளர் திரு.சந்திரமோகன் இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.குமரகுருபரன் இ.ஆ.ப., கூடுதல் ஆணையர்(விசாரணை), திருமதி.ந.திருமகள், காஞ்சிபுரம், இணை ஆணையர் திரு.பொ.ஜெயராமன், ஆகியோர் உடனிருந்தனர்.

இத்திருக்கோயிலுக்கு சொந்தமான இதே பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மிகுதியான 96.5 கிரவுண்ட் பரப்புள்ள இதர இடங்களும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, சுற்றுலா பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை செயலாளர் திரு.சந்திரமோகன் இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.குமரகுருபரன் இ.ஆ.ப., மற்றும் இந்த சமய அறநிலையத்துறை அலுவலர்கள், மற்றும் திருக்கோயில் பணியாளர்களுடன் ஆய்வு செய்யப்பட்டு இதர இடத்தையும் முழுமையாக திருக்கோயில் வசம் சுவாதீனம் எடுத்திட துரித நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.